எம்.எல்.ஏ. அலுவலகம் திறப்பு...

நீலகிரி மாவட்டம், கூடலூர் ஹெல்த்கேம்ப் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சட்டப்பேரவை உறுப்பினர் அலுவலகத்தை திறந்துவைக்கும் குன்னூர் எம்.எல்.ஏ. கே.எம்.ராஜு, கூடலூர் கோட்டாட்சியர் குணசேகரன். உடன், கூடலூர் சட்டப்பேரவை உறுப்பினர் மு.திராவிட மணி, கூடலூர் நகரச் செயலாளர் ச.இளஞ்செழியன், நகர்மன்ற தலைவர்கள் பரிமளா உள்ளிட்டோர்.

உதகையில் பாஜக சட்டப்பேரவை உறுப்பினர் அலுவலகம் திறப்பு

உதகையில் பாஜக சட்டப்பேரவை உறுப்பினர் அலுவலகத்தை திறந்துவைக்கிறார் அக்கட்சியின் தேசிய துணைத் தலைவர் ஏ.பி. அப்துல்லா குட்டி. உடன், சட்டப்பேரவை உறுப்பினர் எம்.போஜராஜன் உள்ளிட்டோர்.

உதகை, ஜூன் 11: நீலகிரி மாவட்டம் உதகையில் பாஜக சட்டப்பேரவை உறுப்பினர் அலுவலகத்தை அக்கட்சியின் தேசிய துணைத் தலைவர் ஏ.பி. அப்துல்லா குட்டி வியாழக்கிழமை திறந்துவைத்தார்.

உதகை சட்டப் பேரவை உறுப்பினராக எம்.போஜராஜன் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவர் மக்கள் பணியாற்ற உதகை பிரிக்ஸ் பள்ளி அருகே சட்டப்பேரவை உறுப்பினருக்கான கட்டடம் ஏற்கெனவே உள்ள நிலையில், அக்கட்டடத்தின் புனரமைக்கும் பணிகள் முடிவடைந்து வியாழக்கிழமை திறக்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சிக்கு உதகை சட்டப் பேரவை உறுப்பினர் எம்.போஜராஜன் தலைமை வகித்தார். பாஜக மாவட்டத் தலைவர் ஏ.தர்மன் மற்றும் மாநில செயற்குழு உறுப்பினர் மோகன்ராஜ், மாவட்ட பொதுச்செயலர் பரமேஸ்வரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பாஜக தேசிய துணைத் தலைவர் ஏ.பி. அப்துல்லா குட்டி அலுவலகத்தை திறந்துவைத்தார். இந்த நிகழ்ச்சியில் அதிமுக மாவட்டச் செயலாளர் பால நந்தகுமார், முன்னாள் எம்.பி. கே.ஆர்.அர்ஜுணன், கட்சி நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நீலகிரியில் சிங்கப்பெண் சிறப்புப் படை தொடக்கம்

சிங்கப்பெண் சிறப்புப் படையின் வாகனத்தை கொடியசைத்து தொடங்கிவைக்கிறார் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.பிருந்தா.

உதகை, ஜூன் 11: நீலகிரி மாவட்டத்தில் காவல் துறை சார்பில் அமைக்கப்பட்ட சிங்கப்பெண் சிறப்புப் படையை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.பிருந்தா வியாழக்கிழமை தொடங்கிவைத்தார்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில், தமிழக முதல்வர் சி.ஜோசப் விஜய், சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படையை சென்னையில் செவ்வாய்க்கிழமை தொடங்கிவைத்தார்.

இதைத் தொடர்ந்து, நீலகிரி மாவட்டம், உதகை சேரிங்கிராஸ் பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் சிங்கப் பெண் சிறப்பு அதிரடிப்படையை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எஸ்.பிருந்தா தொடங்கிவைத்தார்.

பின்னர் அவர் பேசும்போது, தமிழக முதல்வரின் உத்தரவுப்படி நீலகிரி மாவட்டத்தில் சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை சேவை தொடங்கப்பட்டுள்ளது. மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மேற்பார்வையில் இந்தப் படை செயல்படும்.

இந்த சிங்கப்பெண் சிறப்புப் படையில் இரண்டு சார்பு ஆய்வாளர்கள், நான்கு பெண் காவலர்கள் சுழற்சி முறையில் பணியில் ஈடுபடுவர். பள்ளி, கல்லூரி, பேருந்து நிலையம், சுற்றுலாத் தலங்கள் மற்றும் பெண்கள் அதிகம் கூடும் இடங்களில் இவர்கள் காலை 7 மணி முதல் இரவு 12 மணி வரை வாகனத்தில் சென்று ரோந்துப் பணியை மேற்கொள்வார்கள். பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நடைபெற்றால் பொதுமக்கள் 100 என்ற எண்ணைத் தொடர்பு கொள்ள வேண்டும் என்றார்.

கூடலூரில் அரசுப் பள்ளியில் குழந்தைகளை சேர்த்த பெற்றோர்களுக்கு வரவேற்பு

நந்தட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் குழந்தைகளை சேர்த்த பெற்றோரை வரவேற்ற வட்டாரக் கல்வி அலுவலர் வனிதா.

கூடலூர், ஜூன் 11: கூடலூரில் அரசுப் பள்ளியில் குழந்தைகளை சேர்த்த பெற்றோர்களை வட்டாரக் கல்வி அலுவலர் வனிதா வரவேற்றார்.

நீலகிரி மாவட்டம், கூடலூரில் நீதித் துறையில் பணியாற்றும் சுரேந்திரன் தனது குழந்தைகளை தனியார் பள்ளியிலிருந்து விலக்கி, நந்தட்டி பகுதியிலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் சேர்த்தார்.

அதேபோல பல பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை அரசுப் பள்ளியில் சேர்க்க வந்திருந்தனர். அவர்களை வட்டாரக் கல்வி அலுவலர் வனிதா, இனிப்புகள் வழங்கி ஆசிரியர்களுக்கு அறிமுகம் செய்தார். இதில் பள்ளியின் தலைமை ஆசிரியர் பிரிஜிதா மற்றும் ஆசிரியர்கள் பெற்றோர்கள் கலந்துகொண்டனர்.

கூடலூர், பந்தலூர் பகுதிகளில் குடியிருப்புகளுக்குள் நுழைந்த காட்டு யானைகள்

சேரங்கோடு கையுண்ணி பகுதியில் குடியிருப்பின் கேட்டை சேதப்படுத்தி யானை.

கூடலூர், ஜூன் 11: கூடலூர் மற்றும் பந்தலூரை சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள குடியிருப்புகளுக்குள் காட்டு யானைகள் புதன்கிழமை இரவு நுழைந்ததால் பொதுமக்கள் அச்சமடைந்தனர்.

நீலகிரி மாவட்டம், பந்தலூர் வட்டம் சேரங்கோடு ஊராட்சியில் உள்ள கையுண்ணி பகுதிக்கு வந்த காட்டு யானை அங்குள்ள கேசு என்பவரது வீட்டின் கேட்டை திறந்து உள்ளே நுழைந்து வீட்டைச் சுற்றியுள்ள விவசாய பயிர்களை சேதப்படுத்தியது.

யானை கேட்டை உடைத்து உள்ளே வருவதை பார்த்த வீட்டிலிருந்தவர்கள் அச்சத்தில் மாடிக்கு ஓடினர். பின்னர் விவசாய பயிர்களை சேதப்படுத்திய யானை திரும்பிச் சென்றது.

அதேபோல கூடலூரை அடுத்துள்ள பாடந்தொரை கடை வீதிக்குள் புதன்கிழமை இரவு நுழைந்த காட்டு யானை அங்குள்ள ஒரு வீட்டின் முன் நீண்ட நேரம் நின்றிருந்ததால் அப்பகுதி மக்கள் அச்சமடைந்து வனத் துறையினருக்கு தகவல் தெரிவித்தனர். சம்பவ இடத்துக்கு வந்த வனத் துறையின் யானையை விரட்டினர்.

மக்களை அச்சுறுத்தும் காட்டு யானைகளை அடர்ந்த வனத்துக்குள் விரட்ட வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோபி சுற்று வட்டாரப் பகுதிகளில் மழை

கோபி பேருந்து நிலையப் பகுதியில் வியாழக்கிழமை மாலையில் பெய்த மழை.

கோபி, ஜூன் 11: கோபி சுற்று வட்டாரப் பகுதிகளில் வியாழக்கிழமை பரவலாக மழை பெய்தது.

கோபி சுற்று வட்டாரப் பகுதியில் கடந்த சில நாள்களாக வெயிலின் தாக்கம் அதிகரித்து காணப்பட்டது. இந்நிலையில் வியாழக்கிழமை கோபியின் பல்வேறு பகுதியில் மாலை வரை வெப்பம் வாட்டி வதைத்து வந்தது. மாலையில் திடீரென வானத்தில் கருமேகங்கள் சூழ்ந்து இடி, மின்னலுடன் மிதமான மழை பெய்யத் தொடங்கியது. இதில் கோபி, கரட்டூர், நஞ்சகவுண்டம்பாளையம், லக்கம்பட்டி, சிறுவலூர், கொளப்பலூர், குள்ளம்பாளையம், நாதிபாளையம், வெள்ளாளபாளையம், பொலவக்காளிபாளையம், காசிபாளையம் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் இடி, மின்னலுடன் சுமார் அரை மணி நேரத்துக்கும் மேலாக மிதமான மழை பெய்ததால் பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

அசையா சொத்து/க்கள் ஜப்தி செய்யப்பட்டதற்கான அறிவிப்பு

(2002-ம் வருடத்திய பல மாநில கூட்டுறவு சங்கங்களின் சட்ட பிரிவு 94 மற்றும் 2002-ம் வருடத்திய பல மாநில கூட்டுறவு சங்கங்களின் விதி 37 (5) மற்றும் விதி 37(11)(d)

இ.பி.எண். 167/2026 இதில் ஏ.ஆர்.சி எண்.11/2021

இவ்வறிப்பானது, தயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் மேம்பாட்டு வங்கிக்காக ரெப்கோ வங்கிகூட்டுறவு சங்கங்களின் மத்தியப் பதிவாளரால் நியமிக்கப்பட்ட விற்பனைஅதிகாரிஎன்றமுறையில்,பலமாநிலகூட்டுறவு சங்கங்களின் சட்டம் 2002,பிரிவு 94 மற்றும் அதன் கூடிய விதி 37 (3) - ன் படி, கீழ்கண்ட தீர்ப்புக் கடனாளிகளுக்கு **30.01.2026** தேதியிட்ட ஒருகேட்புத்தொகை அறிவிப்பை பிறப்பித்தது **1). மெ/ஸ். ஸ்ரீ சம்ஹ்ளா ஸ்பின்னிங் மில், பங்குதாரர்கள், 1. திரு. P.ஜயப்பன், 2. திருமதி I.விமல் என்கிற விமலாதேவி, 2). திரு.P.ஜயப்பன், த/பெ. திரு. பஞ்சாட்சரம், பங்குதாரர்கள், மெ/ஸ். ஸ்ரீ சம்ஹ்ளா ஸ்பின்னிங் மில், 3). திருமதி. I.விமல் என்கிறவிமலாதேவி, க/பெ. P.ஜயப்பன், பங்குதாரர்கள், மெ/ஸ். ஸ்ரீ சம்ஹ்ளா ஸ்பின்னிங் மில்,** அலைவின் தொழில் முகவரிமெ/ஸ். ஸ்ரீ சம்ஹ்ளா ஸ்பின்னிங் மில், எண்.6, முதலிதோட்டம், பாரதிநகர், பெரியசேமூர், ஈரோடு - 638 004.

4). திருமதி. P. வீனாவதி, க/பெ. திரு. பஞ்சாட்சரம், அலைவின் வீட்டு முகவரி எண்.349/122, பிராஃப் ரோடு, ஈரோடு - 638 001. **5). திரு. C.முருகவேல்த/பெ. திரு. சின்னியப்பன், மெ/ஸ். சன்மேக்ஸ்.** பிராவலிங் மில், எண்.2, முதலிதோட்டம், சோலை, ஈரோடு - 638 004. புதியஎண்.6/1, பழையஎண்.1/10, புதுவலசு, வக்கீலபுரம், ஈரோடு - 638 002. கேட்புத் தொகை அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள தொகையான **ரூ.2,87,57,212/- ரூபாய் இரண்டு கோடியே எண்பத்து ஏழு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து இருநூற்று பன்னிரெண்டு மட்டும்! 31.03.2021** தேதி வரை மற்றும் அதன் பின்னிட்டு 9% p.a. வட்டியை அந்த அறிவிப்பு கிடைத்த நாளிலிருந்து 15 நாட்களுக்குள் தீர்ப்புக் கடனாளிகள் திருப்பிச் செலுத்தத் தவறியதால் கீழ் கையெழுத்திட்ட விற்பனை அதிகாரி, மேற்சொன்ன சட்டபிரிவு 94 அதன் கூடிய விதி37 (5) மற்றும் விதி 37 (11) (d) ன், கீழ் அவருக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களைப் பயன்படுத்தி கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையா சொத்தை **06.06.2026** ஆம் தேதி ஜப்தி செய்துள்ளார் என்று தீர்ப்புக் கடனாளிகளுக்கும் பொதுமக்களுக்கும் இதன் மூலம் பொதுஅறிவிப்பு வழங்கப்படுகிறது.

இந்த அறிவிப்பின்படி நிலுவைத் தொகையைச் செலுத்த தீர்ப்புக் கடனாளிகளுக்கு மேலும் 15 நாட்கள் கால அவகாசம் அளிக்கப்படுகிறது, செலுத்த தவறும் பட்சத்தில் கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, விற்பனைக்கு கொண்டு வரப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இது முதற்கொண்டு, பொதுமக்கள் குறிப்பாக தீர்ப்புக் கடனாளிகளும்/அடமானதாரர்களும் சகவமானவரும் சொத்திலோ/சொத்தின் பேரிலோ எவ்வித பரிவர்த்தனைகளும் வைத்துக் கொள்ளவேண்டாம் என்றும் அப்படி ஏதேனும் மேற்கொண்டால் அதுரெப்கோ வங்கி ஈரோடு கிளைக்கு **31.03.2021** தேதிக்கு வரவேண்டிய கடன் தொகையான **ரூ.2,87,57,212/- ரூபாய் இரண்டு கோடியே எண்பத்து ஏழு இலட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து இருநூற்று பன்னிரெண்டு மட்டும்!** மற்றும் அதன் பின்னிட்டு 9%p.a. வட்டிமற்றும் செலவுத் தொகையினை உட்படுத்தியே செய்ததாக கொள்ளப்படும் என்பதை அறியவும்.

அசையா சொத்து விவரம்

ஈரோடு மாவட்டம், ஈரோடு பதிவு மாவட்டம், ஈரோடு உப பதிவு மாவட்டம், ஈரோடு வட்டம், ஈரோடு டவுன், 14 வது இடயான் கூட்டு வலசை, தற்போது வார்டு எண்.11, கலைமகள் கல்வி நிலையம் ரோடு, பழைய டி.எஸ்.எண்.46 & 47 புதியவார்டு'B', புதியமனை எண்.5, புதிய டி.எஸ்.எண் 28, கதவுஎண்.50, 50/1 முதல் 50/6, 51, இதன் அளவுகள் 2600 சதுரடி கொண்டமனை மற்றும் அதிலுள்ள கட்டிடம் உட்பட இதன் **எல்லைகள்:** வடக்கே-தெய்வசிகாமணியுடைய சொத்து, தெற்கே-கோபாலுடைய சொத்து, கிழக்கே-கலைமகள் கல்விநிலையம் ரோடு, மேற்கே -10 அடி அகல தென்வடல் முனுசிபல் லேன். **இதன் அளவுகள்** கிழமேல் வடபுரம் -100 அடி,கிழமேல் தென்புரம் -100 அடி, தென்வடல் கிழபுரம்-26 அடி, தென்வடல் மேல்புரம்-26 அடி சகலபாத்தியம் உட்பட.

இடம் : ஈரோடு
தேதி : 06.06.2026

விற்பனை அதிகாரி
MSCS Act 2002 ன்படி நியமிக்கப்பட்டவர்

மாற்றுத்திறனாளி ஆசிரியர்கள் அவமதிப்பு: தலைமை ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரிக்கை

ஈரோடு, ஜூன் 11: ஈரோட்டில் மாற்றுத்திறனாளி ஆசிரியர்களை தொடர்ந்து அவமதித்து வரும் தலைமை ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு அனைத்துவகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்க நிர்வாகிகள், ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை அளித்த மனு விவரம்:

வீரப்பன்சத்திரத்தில் மாசிமலை ரங்கசாமி கவுண்டர் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி செயல்பட்டு வருகிறது. அப்பள்ளியில் பணிபுரிந்து வரும் ஆசிரியர்கள் சத்தியாவதி, கந்தமணி ஆகிய இருவரும் கால் ஊனமுற்ற மாற்றுத்திறனாளிகள் ஆவார்கள். இந்நிலையில் பள்ளியின் தலைமை ஆசிரியர் அந்த ஆசிரியர்களின் மனம் புண்படும் வகையிலும், அவர்களை அவமானப்படுத்தும் வகையிலும் அடிக்கடி பேசியும், நடத்தியும் வருகிறார்.

இதுகுறித்து ஆசிரியர்கள் முறையிடும்போது அவர்களைச் சமரசம் செய்வதும், இனிமேல் இப்படிச் செய்ய மாட்டேன் என்று உறுதி கூறுவதும் நடக்கிறது. ஆனால் மீண்டும் அதே போன்ற தவறான செயலில் தலைமை ஆசிரியர் ஈடுபட்டு வருகிறார்.

இதுகுறித்து சம்பந்தப்பட்ட தலைமை ஆசிரியர் மீது ஈரோடு மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் அலுவலகத்துக்கு நேரில் சென்று தனித் தனியாகப் புகார் கடிதம் அளிக்கப்பட்டுள்ளது. தலைமை ஆசிரியரின் தொடர்ச்சியான நடவடிக்கைகள், மாற்றுத்திறனாளி ஆசிரியர்களை திட்டமிட்டுப் பழிவாங்கும் உள்நோக்கம் கொண்டதாக இருக்கிறது.

எனவே மாற்றுத்திறனாளி ஆசிரியர்களை அவமதித்து வரும் தலைமை ஆசிரியர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மொடக்குறிச்சியில் மக்கள் குறைதீர் கூட்டம்

மொடக்குறிச்சி, ஜூன் 11: மொடக்குறிச்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட பொதுமக்களுக்காக மொடக்குறிச்சி எம்எல்ஏ தலைமையில் முள்ளாம்பரப்பில் மக்கள் குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை நடைபெற்றது.

கூட்டத்துக்கு மொடக்குறிச்சி எம்எல்ஏ டி.சண்முகன் தலைமை வகித்தார். மொடக்குறிச்சி வட்டாட்சியர் சிவசங்கர், வட்டார வளர்ச்சி அலுவலர் சுமித்ரா ஆகியோர் முன்னிலை வகித்தனர். இக்கூட்டத்தில் அனைத்துத் துறை சார்ந்த அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டு பொதுமக்களிடமிருந்து மனுக்களை பெற்றுக்கொண்டனர். மொடக்குறிச்சி ஒன்றியத்துக்கு உள்பட்ட பேரூராட்சி மற்றும் ஊராட்சிகளைச் சேர்ந்த பொதுமக்கள் கலந்து கொண்டு மனுக்களை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் மொடக்குறிச்சி ஒன்றிய தவெக செயலாளர் கௌதம், கொடுமுடி ஒன்றிய தவெக செயலாளர் ராம் பிரகாஷ், தவெக நிர்வாகி சிவலிங்கம் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முகாமில் பல்வேறு கோரிக்கைகள் குறித்து 500-க்கும் மேற்பட்ட மனுக்கள் பெறப்பட்டன.

யூனியன் பேங்க் ஆஃ இந்தியா Union Bank of India

பிராந்திய அலுவலகம் – திருப்பூர் : எண்.1/2, முதல் தளம், எவரெடி காம்ப்ளக்ஸ், தாராபுரம் ரோடு, திருப்பூர் – 641 604, போன் : 0421–2321132.
மின்னஞ்சல் : crld.rotiruppur@unionbankofindia.bank.in

தங்க நகை ஏல விற்பனை அறிவிப்பு

கீழே குறிப்பிட்டுள்ள வாடிக்கையாளர்கள் தங்க நகைகளை எமது கீழ்க்கண்ட கிளைகளில் அடமானம் வைத்து கீழ்க்கண்ட விபரப்படி கடன் பெற்றுள்ளனர். கடன் ஒப்பந்த விதிமுறைகளின்படி நிலுவையை வட்டியுடன் செலுத்த தவறியதால் அக்கடன் வாராக்கடன் / ஓவர் டியூ (overdue) இனத்தில் சேர்க்கப்பட்டுள்ளது. கடன்தாரர்கள் எமது கிளையால் கேட்டுக் கொள்ளப்பட்டும், பலமுறை அறிவித்தும் கடனைத் திரும்பச் செலுத்தி நகைகளை மீட்டுக் கொள்ள முன்வரவில்லை. எனவே கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்களுக்கு கேட்பு அறிவிப்புகள் மற்றும் விற்பனை அறிவிப்புகள் பதிவு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டும், அவர்கள் கடன் கணக்கை முடித்துக் கொள்ள தவறிவிட்டனர். எனவே இதனால் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கடன்தாரர்கள் மேற்படி கடனை **24.06.2026** தேதியன்று அல்லது அதற்கு முன்பாக கட்டிமுடித்து நகையை திரும்ப பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தவறும் பட்சத்தில் வங்கியால் மேற்படி நகைகளை **25.06.2026 தேதியன்று பிற்பகல் 3.00 மணி**யளவில் கீழே குறிப்பிட்டுள்ள கிளைகளில் வைத்து பொது ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என எச்சரிக்கப்படுகிறார்கள். ஏலத்தில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் மேற்கொண்டு விபரங்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ள கிளை மேலாளரை அணுகவும்.

வ. எண்.	Sol ID	கிளை	கடன்தாரர் பெயர்	கணக்கு எண்	31.05.2026 தேதி அன்று நிலுவைத் தொகை	மொத்த எடை கிராமில்
1	75620	மூலப்பாளையம்	திரு.கார்த்திகேயன்.J	756206540003875	ரூ.1,24,300.00	48.000
2	75620	மூலப்பாளையம்	திரு.களில்.I	756206630002453	ரூ.5,20,735.00	81.500
3	77840	சத்தியமங்கலம்	திரு.தீபன் குமார்	778406540001295	ரூ.15,675.00	4.000

ஏல நிபந்தனைகள் : 1. எந்த ஒரு காரணமும் காட்டாது அட்டவணையிட்ட ஏலத்தை மாற்ற/திருத்த/ரத்து செய்ய, வங்கி உரிமையுடையதாகும். 2. நகைகளின் ஏலத்திற்குப் பிறகு எவ்வித புகாரும் ஏற்கப்பட மாட்டாது என்பதையும் அறிந்து கொள்ளவும். 3. எந்தவொரு நிலையிலும் எந்தவொரு அல்லது அனைத்து ஏலக் கேட்பையும் ஏற்கவோ, மறுக்கவோ வங்கி உரிமையுடையது. நிபந்தனைகளில் மாற்றம் செய்து கொள்வதும் வங்கியின் முடிவின்படியே நடைபெறும்.

ஏலத் தேதி மற்றும் நேரம் : 25.06.2026 – பிற்பகல் 3.00 மணி

தொடர்பு கொள்ள வேண்டியவர் :
மூலப்பாளையம் கிளை மேலாளர் : திருமதி.பிரியா – 8072308237
சத்தியமங்கலம் கிளை மேலாளர் : திரு.இளங்கோ – 7502589961

இடம் : திருப்பூர்
தேதி : 10.06.2026

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
யூனியன் பேங்க் ஆஃ இந்தியா

அம்மாபேட்டையில் மலக்கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்க எதிர்ப்பு

பவானி, ஜூன் 11: அம்மாபேட்டையில் தூய்மை இந்தியா இயக்கம் மூலம் ரூ.8.16 கோடியில் மலக்கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டத்தைக் கைவிட வலியுறுத்தி அம்மாபேட்டை பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் வியாழக்கிழமை தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இக்கூட்டத்துக்கு பேரூராட்சித் தலைவர் கே.என்.வெங்கடாசலம் தலைமை வகித்தார். செயல் அலுவலர் ஜனாநந்தன் முன்னிலை வகித்தார். இதில், தூய்மை இந்தியா இயக்கம் 2.0 மூலம் அம்மாபேட்டையில் கழிவு நீர் மற்றும் மலக்கழிவு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கும் திட்டத்தை மத்திய, மாநில அரசுகளின் 83 சதவீத பங்களிப்பு, பேரூராட்சி நிர்வாகத்தின் 17 சதவீத பங்களிப்பு ரூ.1.04 கோடியுடன் சேர்த்து மொத்தம் ரூ.8.16 கோடியில் செயல்படுத்த கடந்த ஜனவரி 30-இல் பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தை செயல்படுத்த தேவையான சாத்தியக் கூறுகள், கருத்துக் கேட்பு, முன் அனுமதி, செயலாக்கம் குறித்தும், மாதாந்திர

பேரூராட்சியில் தீர்மானம்

பராமரிப்பு, பணியாளர் ஊதியம், போதிய நிதி ஆதாரம் குறித்து பேரூராட்சி மன்றக் கூட்டத்தில் ஒப்புதல் பெறப்படவில்லை.

எனவே, இத்திட்டத்தை செயல்படுத்தும் முடிவைக் கைவிட வேண்டும் என கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அப்போது அவர் பேசுகையில், இத்திட்டத்துக்கு பேரூராட்சி பங்களிப்பாக ரூ.1.04 கோடி வழங்கினால், பொதுநிதியில் மேற்கொள்ளப்படும் பிற பணிகள் முற்றிலும் பாதிக்கப்படும். எனவே, பேரூராட்சி நிர்வாகத்தின் ஒப்புதல் இல்லாமல் திணிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தை செயல்படுத்தும் முடிவைக் கைவிட வேண்டும் என பேரூராட்சித் தலைவர் கே.என்.வெங்கடாசலம் தெரிவித்தார்.

மேலும், மேட்டூர் வலதுகரை வாய்க்காலில் ரூ.2.92 கோடியில் தார் சாலை அமைத்தல் உள்பட 9 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பாங்க் ஆஃப் பரோடா Bank of Baroda India's International Bank

பேங்க் ஆப் பரோடா
கிளை : கடத்தூர் – சத்தி மெயின் ரோடு, கோபி தாலுகா, கடத்தூர், ஈரோடு – 638 454.தமிழ்நாடு, இந்தியா, போன் : 04285 – 251225,
மின்னஞ்சல் : KADATH@bankofbaroda.bank.in

அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின், விற்பனை அறிவிப்பு
பிற்சேர்க்கை –IV-A (காண்க, நிபந்தனைகளின் விதி 6(2) & 8(6))

கடனீட்டு சொத்துக்கள் ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை மறு சீரமைத்தல் கடனீட்டு சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்க சட்டம், 2002 பிரிவு 6(2) & 8(6)–ன் கீழ் அசையாச் சொத்துக்களுக்கான விற்பனையின் மின்–ஏல விற்பனை அறிவிப்பு.
கீழே விவரிக்கப்பட்டுள்ள பாங்க் ஆப் பரோடா வங்கியில் அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை வங்கி அங்கீகாரம் பெற்ற அதிகாரி சுவாதீனம் எடுத்துள்ளார். இதன் மூலம் பொதுமக்கள் மற்றும் கடன்தாரர்கள், ஜாமின்தாரர்கள், அடமானதாரர்கள் அனைவருக்கும் அறிவிப்பது என்னவென்றால், பாதுகாக்கப்பட்ட கடனீந்தவரின் அடமானத்திற்குள்ளான/ஈடு வைக்கப்பட்ட, வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் சுவாதீனப் படுத்தப்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள சொத்து, நிலுவையை வசூலிக்க வேண்டி "எங்கு உள்ளனவோ அந்நிலையில்", "என்ன உள்ளனவோ அப்படியே", "எப்படியுள்ளதோ அப்படியே" மற்றும் "பொறுப்பேற்காத நிலையில்" எனும் முறையில், மின் ஏல விற்பனை செய்யப்பட உள்ளது. கடன்தாரர்(கள்) / அடமானதாரர்(கள்) / உத்தரவாதமளித்தவர்(கள்) / பாதுகாக்கப்பட்ட சொத்து(க்கள்) / நிலுவைகள் / நிர்ணயிக்கப்பட்ட விலை / முன்வைப்புத் தொகை / மின் ஏலத் தேதி மற்றும் நேரம் / ஏல அதிகரிப்பு தொகை போன்ற விபரங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

கடன்தாரர்கள் / உத்தரவாதம் அளித்தவர்கள் பெயர் மற்றும் விலாசம்	அசையாச் சொத்தின் சுருக்க விபரம் வில்லங்கங்கள் ஏதேனும் இருப்பின் அதனுடன்	மொத்த நிலுவைத் தொகை	மின் ஏலத் தேதி / நேரம்	1. குறைந்தபட்ச விலை, 2. முன் வைப்புத் தொகை 3. ஏல உயர்வுத் தொகை	சுவாதீன நிலை (ஆக்கபூர்வ/ கொள்நிலை)	சொத்தினைப் பார்வையிடும் தேதி / நேரம்
1.திரு.பொங்கியண்ணன். R, (விண்ணப்பதாரர்), த/பெரங்கசாமி, எண்.94/2, K.செட்டிபாளையம், குடக்கரை அஞ்சல், தமிழ்நாடு – 638454, 2.திருமதி.சாந்தி. P (சார் விண்ணப்பதாரர்), க/பெ.பொங்கியண்ணன், R, எண்.94/2, K.செட்டிபாளையம், குடக்கரை அஞ்சல், தமிழ்நாடு – 638454, 3.திருமதி.ஸ்ரீபிரியா.P, (சார் விண்ணப்பதாரர்), த/பெ.பொங்கியண்ணன்.R, எண்.94/2, K.செட்டிபாளையம், குடக்கரை அஞ்சல், தமிழ்நாடு – 638454	சத்தியமங்கலம் சார் பதிவு அலுவலகத்தின் தீர்வு ஆவண எண்.928/2019 நாள் 20.02.2021, திருமதி.P.சாந்திக்குச் சொந்தமான அட்டவணைச் சொத்தின் விவரம் ; ஈரோடு மாவட்டம், நம்பியூர் தாலுகா, குடக்கரை கிராமம், சர்வே எண்.259/2பில் உள்ள புன்செய் ஏக்கர் 0.24 விஸ்தீரணம் கொண்ட வீட்டு மனை மற்றும் கட்டிடச் சொத்து. அதன் அனைத்து அறிவிருத்திகள் மற்றும் பிற பயன்பாட்டுரிமைகள் சேர்ந்த இச்சொத்தின் **எல்லைகள் :** தென்வடல் ரோட்டுக்கு மேற்கு, பெரியதம்பி நிலத்துக்கு வடக்கு, R பொங்கியண்ணன் நிலத்துக்குக் கிழக்கு, R பொங்கியண்ணன் நிலத்துக்குத் தெற்கு.	31.05.2026 தேதியன்று, ரூ.35,61,171/– மேலும் 05.06.2026 தேதியிலிருந்து சேர்க்கப்பட வேண்டிய வட்டி + NPA தேதியிலிருந்து சட்டப்படியான மற்றும் பிற செலவுகளுடன்	28.07.2026 பிற்பகல் 2.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை	1. ரூ.73,40,000/– 2. ரூ.7,34,000/– 3. ரூ.25,000/–	அடையாள (Symbolic) சுவாதீனம்	27.07.2026 காலை 10.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை

விற்பனை குறித்த விரிவான நிபந்தனை விபரங்களுக்கு https://www.bankofbaroda.in/e-auction.htm மற்றும் ஆன்லைன் ஏலத்தின் போர்டல் https://baanknet.com இணையதளங்களில் லிங்க்–ல் பார்வையிடலாம். மேலும் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியை போன் : 9944003476 / 9176060206; என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

தேதி : 05.06.2026 / இடம் : ஈரோடு

(அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி)
பேங்க் ஆஃப் பரோடா